9.7.2026
எம்சிஓபி.எண். 173/2022
ம.சா.1 சுமதி க/பெ. பழனிசாமி

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் ஆவார். அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். 2ம் மனுதாரர் இறந்துபோன நபரின் தந்தை ஆவார். விபத்து கோவை மாவட்டம் பொள்ளாச்சி செல்லும் சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்தின்போது எனது மகன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பொள்ளாச்சி முதல் கோவை செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது நான்கு சந்திப்பு சாலையில் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி திரும்பும் போது விபத்து நடந்தது என்றால் சரிதான். TN 28 AA 9713 என்ற ஈச்சர் வாகனத்தின் ஓட்டுனர் நான் வழிசாலையில் முறையாக வாகனத்தை ஓட்டி வந்தார்ஏ ன்றும், எனது மகன் தான் அஜாக்கிரதையாக சென்று அந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் எனது மகனின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் என்றால் சரியல்ல.

எனது மகன் விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் வேலை தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் அவரது வருமானத்தை காட்டும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகனின் கல்வி தகுதி தொடர்பாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.12 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மகன் இறக்கும்போது 26 வயது என்றால் சரிதான். விபத்து எனது மகனின் தவறால் நடந்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/- சுமதி

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.